1978 செப்டம்பர் 9]

என்று சொல்லி, அதற்காக, போராட்டம் நடத்தினர்கள்; பின்னல் உண்ணுவிரதம் இருந்தார்கள். அதன் பிறகும் நிர்ணயித்த கூலி கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன நடவடிக்கை அரசு எடுக்கப் போகிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, குறைவாக கூலி கொடுக்கப்படுவதில்லை என்று நான் சொல்லவில்லை. குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று புகார் வந்தால் இந்த அரசு விசாரிக்கும் என்று சொன்னேன். புகார் வந்தால், அதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுப்பதைவிட இந்த அரசுக்கு வேறு என்ன வேலை இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 10 வினக்கள் இருக்கின்றன. இன்றைக்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் பேச வேண்டி இருப்பதால், வினு நேரத்தை நீட்டித்துக்கொண்டு போக முடியாது. மேலும் வினு நேரத்தை நீட்டித்தால் மற்ற நிகழ்ச்சிகளும் பாதிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மீதமுள்ள கேள்விகளும், பதில்களும் நடவடிக்கைக் குறிப்பில் சேர்த்து அச்சிடப்பெறும்.

அரயபுரம் அரிசனக் குடியிருப்புக்கு மின்சக்தி வழங்கல்.

*வினு எண். 116 திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி சேத்திரபாலபுரம் ஊராட்சியில் அரயபுரம் அரிசன காலனிக்கு மின்வசதி செய்து கொடுக்க மின் கம்பம் நடப்பட்டு கம்பிகள் இழுக்கப்பட்டும் மின் இணைப்பு கொடுக்காததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) குத்தாலம் தொகுதி சேத்திரபாலபுரம் ஊராட்சியில் உள்ள அரயபுரம் அரிசன குடியிருப்புப் பகுதியில் தெரு விளக்குகள் அமைத்து அவைகளுக்கு 22—4—1978 அன்று மின்சக்தி அளிக்கப்பட்டு விட்டது.

(ஆ) இவ்வினுவிற்கு இடமில்லை.